# DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No.116/2024**

Deposition of Witness of PW3

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : சக்திவேல் | | Calling | : |
| Father/Husband's Name | : தங்கராஜ் | | Age | : |
| Village | : | | | : |
| Taluk | : | | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 28th October 2025.

எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள்.
சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை:**

நான் 46 புதூர் தீரன் நகரில் வசித்து வருகிறேன். நாடார்மேட்டில் எலெக்ட்ரானிக் கடை வைத்துள்ளேன். கடந்த 17.03.2022 ம் தேதி எனது மகளை கொங்கு பள்ளியில் படித்து வருபவரை அழைத்து வருவதற்காக மதியம் 3.30 மணிக்கு ேஹாண்டா இருசக்கர வாகனத்தில் சாய்பாபா கோவில் வழியாக சென்றேன். அப்போது லட்சுமி என்பவர் வழக்கமாக சாய்பாபா கோவிலுக்கு சாமிகும்பிட வருவார். அன்றும் நான் குழந்தையை பள்ளியிலிருந்து அழைத்து வர சென்று கொண்டிருந்தபோது சாய்பாபா கோவில் வளைவில் கிழக்கு திசையில் திரும்பிய போது மேற்படி லட்சுமியிடம் இருந்து 2 நபர்கள் செயினை பிடிங்கி கொண்டு சென்றதை நானும் பார்த்தேன். லட்சுமியும் என்னிடம் சொன்னார்.

2. மஞ்சள் நிற டியோ வண்டியில் செயினை பறித்து கொண்டு 2 நபர்கள் சென்ற நபர்கள் சென்றார்கள். அதை நானும் பார்த்தேன். பின்னால் துரத்திக் கொண்டு சென்றேன். அவர்கள் வேகமாக சென்றுவிட்டார்கள். நான் என் பைக்கை திருப்பி கொண்டு வந்துவிட்டேன். இன்னொரு நபரும் அந்த பைக்கில் பின்னால் பின்தொடர்ந்து சென்றார். நான் பள்ளிக்கு சென்றுவிட்டேன். நான் வீட்டிற்கு வந்தேன். என்னை இந்த வழக்கு சம்பந்தமாக போலீஸார் விசாரித்தார்கள். எல்லா விபரங்களையும் சொன்னேன். செயினை பறித்த சென்ற நபர்களில் இருவரில் ஒருவர் பச்சை கலர் சட்டையும், மற்றொரு கருப்பு கலர்

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.10.28 17:45:57 +0530

சட்டையும் அணிந்திருந்தார். லட்சுமி என்பவரது கழுத்தில் அணிந்திருந்த செயின் கொடி மாதிரி சுமார் 5 பவுன் மதிப்புள்ள தங்க செயினை பறித்த சென்ற நபர்கள் வண்டி பதிவு எண். TN 69 BU 1300 ஆகும். மேலும் இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட நபர்களை பிடித்து விட்டதாக சொன்னார்கள். போலீஸார் அழைத்ததின் பேரில் 29.03.2022ல் நான் காவல் நிலையத்திற்கு சென்று அந்த நபர்களை அடையாளம் காட்டினேன். தற்பொழுதும் எனக்கு அவர்களை பார்த்தால் தெரியும், முகம் எல்லாம் மாறிவிட்டது. இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள நீலமுழுக்கை சட்டை அணிந்திருந்த நபர் பைக்கின் பின்னால் உட்கார்ந்து செயினை பறித்த நபர் ஆவார். செயினை பறித்த நாளன்று அவர் கருப்பு கலர் சட்டை அணிந்திருந்தார். இன்று நீலம் வெள்ளை டி–சட்டை அணிந்திருந்த நபர் தான் செயின் பறித்தபோது பைக்கை ஓட்டி சென்ற நபர் ஆவார். அவர் அன்று பச்சை கலர் சட்டை அணிந்திருந்தார் இவர்கள் இருவரையும் நான் போலீஸாருக்கு காவல்நிலையத்தில் வைத்து அடையாளம் காட்டினேன். இது சம்பந்தமாக என்னை போலீஸார் விசாரித்தார்கள்.

**எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலையாகியும் குறுக்கு விசாரணை சாட்சியம் செய்யப்படாததால் குறுக்கு விசாரணை சாட்சியம் முடித்து வைக்கப்படுகிறது.**

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.10.28 17:46:03 +0530